**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,**
**ந.க.எண்**. 2076 /**ஆ**4/2026 , **நாள்**. **08.06.2026**

*****

**பொருள்** : பயிற்சி – பள்ளிக்கல்வி – மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட சிறப்பு அனுமதி வழக்கின் (SLP) தீர்ப்பாணையின் அடிப்படையில் தற்போது சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்விற்கு விண்ணப்பித்துள்ள, இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வினை எதிர்கொள்ளுதல் இணையதளம் வழியாக பயிற்சி வழங்குதல் –08.06.2026 குறித்து 30.06.2026 முடிய பயிற்சி வழங்குதல் – அறிவுரை வழங்குதல் –தொடர்பாக.

**பார்வை :** பள்ளிக் கல்வி இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள், ந.க.எண். 44750/ எப்.3 /2024 நாள் 05.06.2026.

*****

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகளுகிணங்க சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வினை (Special TET) எதிர்கொள்ளும் ஆசிரியர்களுக்கு 08.06.2026 முதல் 30.06.2026 முடிய பயிற்சி இணையதளம் வாயிலாக வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சி மாலை 06.30 மணி முதல் 08.00 மணி முடிய நடைபெறவுள்ளது.

இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள Google படிவத்திற்கான Link–ஐ சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்விற்கு விண்ணப்பித்துள்ள ஆசிரியர்களுக்கு தெரியப்படுத்தி இணையப் பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ள ஆசிரியர்கள் பூர்த்தி செய்ய அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**

1. பார்வை–க் கடிதம் மற்றும் அட்டவணை

//ஓம். //
**முதன்மைக் கல்வி அலுவலர்**
வேலூர்.

பெறுநர் :

- அனைத்து அரசு/நகரவை/நிதியுதவி / தொடக்கக் கல்வி /நடுநிலை / உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் (இடைநிலை/தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி ) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது .